மாண்புமிகு பேரவைத் தலைவர் : அப்படியானால் உட்காருங்கள். இது அவருடைய தொகுதி சம்பந்தப்பட்டது. அவருக்கு ஏற்கெனவே கூடுதலாகவே ஒரு கேள்வி அனுமதிக்கப் பட்டுவிட்டது.

வினா எண் 367, திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்.

367—

வத்தலகுண்டு அரசு மருத்துவமனை.

*11173-ஏ— திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வத்தலகுண்டு அரசு மருத்துவமனைக்குப் போதுமான அளவில் இடவசதி இல்லை என்பதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், போதுமான இடவசதி செய்துதர எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) மற்ற மருத்துவமனைகளைப் போல் வத்தலகுண்டு மருத்துவமனையிலும் பொதுமக்கள் அதிக அளவில் பயன்பெறுகிறார்கள். எனவே அரசின் நிதி வசதிக்கேற்ப படிப் படியாக கட்டிட வசதிகளும் மற்ற வசதிகளும் ஏற்படுத்திக் கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வத்தலகுண்டு மருத்துவமனை வத்தல குண்டு அல்லது நிலகோட்டை பகுதி மக்களுக்கு மட்டும் பயன் படவில்லை. கொடைக்கானல், அடியனூர், பன்றிமலை, பண்ணைக்காடு, பெருமாள்மலை போன்ற பகுதி மக்கள் எல்லாம் வத்தலகுண்டு ஆஸ்பத்திரிக்கு வந்துதான் வைத்தியம் பண்ணிக் கொள்ளக்கூடிய நிலைமை இருக்கிறது. அவர்கள் படுப்பதற்கு கட்டில் இல்லாமல், சிரமப்படுகிறார்கள். ஆகவே பக்கத்தில் உள்ள நிலத்தை மக்கள் நலனைக் கருதி எடுத்து இந்த ஆண்டி லேயே அந்த மருத்துவமனையை விரிவு படுத்த நடவடிக்கை எடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

1993 ஏப்ரல் 16]

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே 30 படுக்கைகள் அங்கே இருப்பதாக எனக்குத் தகவல் கொடுத்திருக்கிறார்கள். எனவே அதற்கு மேலே அதிகம் தேவை என்று சொன்னால் நிதித்துறையுடன் கலந்து பேசி—இந்த ஆண்டு என்று உறுதிசொல்ல முடியாது—எனவே நிதிநிலைக்கேற்ப நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அங்கே 30 படுக்கைகள் இருப்பது எனக்கும் தெரியும். அது போதவில்லை. கீழே பாய் விரித்து படுக்கிறார்கள். முக்கியமானவர்கள், உத்தியோகங்களில் இருப்பவர்கள் கூட கீழேதான் படுக்கவேண்டியிருக்கிறது. கஷ்டப்படுகிறார்கள். கொடைக்கானல் தொகுதி மக்கள் முழுவதும் அங்கே வருகிற காரணத்தால் அதை விரிவு படுத்துவதற்கு, அங்கே பக்கத்தில் உள்ள அரசுக்குச் சொந்தமான இடத்தை எடுத்து—அந்த இடத்தை சிலபேர் விளையாடும் இடமாகக்கூட பயன்படுத்துகிறார்கள். உடனடியாக அந்த இடத்தை எடுத்து இந்த ஆண்டிலேயே படுக்கை வசதி மட்டுமாவது செய்ய கட்டிட வசதி செய்துகொடுக்க நடவடிக்கை எடுக்கப்படுமா?

முற்பகல் 10-25.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 30 படுக்கைகள் இருப்பது மாண்புமிகு உறுப்பினருக்கும் தெரியும். எங்களுக்கும் தெரியும். ஆனால் நிதிப் பிரச்சினை இருப்பதை நாங்கள் மட்டும்தான் சொல்லிக்கொண்டிருக்கிறோம். உங்களுக்கு அதைப்பற்றித் தெரிவதில்லை. எனவேதான் சொன்னேன். கட்டிடம் கட்டுவதற்குப் போதிய நிதி ஒதுக்குவதற்கு வாய்ப்பில்லாமல் இருக்கிறது. எனவே நிதி ஒதுக்குகிற வாய்ப்பு எந்த நேரத்திலே கிடைக்கிறதோ அந்த நேரத்தில் செய்யலாம் என்றுதான் சொன்னேன். பக்கத்திலே இடம் இருக்கிறது என்று சொன்னார்கள். அரசுக்கு சொந்தமான நிலம் இருக்கிறது என்று சொன்னார்கள். அந்த நிலம் மருத்துவமனைக்கு சொந்தமா அல்லது வேறு துறைக்கு சொந்தமானதா என்று எனக்குத் தெரியவில்லை. எனவே அதைப்பற்றித் தெரிந்து, அந்த நிலத்தை எடுப்பதற்கான நடவடிக்கை மேற்கொள்ளலாம். எப்போது நிதிப் பிரச்சினை ஓரளவிற்கு சுமுகமாக நம்மோடு ஒத்துப் போகிற அளவிற்கு இருக்கிறதோ, அந்த நேரத்திலே உங்களுக்காக நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 368, திரு. ஆர். பி. பரமசிவம், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.